**ORIGINAL ARTICLE**

# ஐந்தாம் படிவ மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளம்

# [AINTHAM PADIVA MAANAVARKALIN SIRUKATAIKALIL SINTANAI VALAM]

# THINKING SKILLS OF FORM 5 STUDENTS ON WRITING SHORT STORIES

**ஷாமினி பெரியசாமி [1] / Shamini Perisamy [1]**

[1]காப்பார், சிலாங்கூர், மலேசியா/ Kapar, Selangor, Malaysia.
மின்னஞ்சல் / Email: shaminimila@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/09

**ஆய்வுச் சாரம்**

இவ்வாய்வு ஐந்தாம் படிவம் மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளத்தை ஆராய மேற்கொள்ளப்பட்டது. இக்காலக்கட்டத்தில், ஒவ்வொரு மாணவருக்கும் சிந்தனை வளம் முக்கியக் கூறாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக, மாணவர்களிடம் சிந்தனை வளம் இருக்க வேண்டியது என்பது காலத்தின் கட்டாயம் எனலாம். நமது தமிழ் இலக்கியங்களில் ஒன்றான சிறுகதை மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கு ஏற்ற சிறந்த கருவி ஆகும். அவ்வகையில், மாணவர்களிடம் சிறுகதை எழுதும் ஆற்றல் இருக்கின்றதா என்பதனையும் அதில் அவர்களின் சிந்தனை வளம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதனையும் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகக் கருதப்படுகின்றது. இந்த ஆய்வானது, சிலாங்கூர் மாநிலத்தில் காப்பார் வட்டாரத்தில் அமைந்துள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் நடத்தப்பட்டது. இவ்வாய்வுக்கு அப்பள்ளியில் பயிலும் படிவம் ஐந்திலிருந்து பத்து மாணவர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் உட்படுத்தப்பட்டனர். ஐந்தாம் படிவம் மாணவர்கள் எழுதிய நட்பு மற்றும் ஊனம் என்ற இரு கரு அடிப்படையிலான சிறுகதைகள், நேர்காணல் கேள்விகள் போன்றவற்றின் வாயிலாக இவ்வாய்வின் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ்வாய்வின் முடிவில், மாணவர்களின் சிறுகதை எழுதும் ஆற்றலும் சிந்தனை வளமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண முடிகின்றது. இவ்வாய்வில் சிறுகதை மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு வித்திடுகின்றது என்பதும் மாணவர்கள் சிறுகதை எழுதுவதில் சிறந்த சிந்தனை வளத்தைக் கொண்டுள்ளனர் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்களின் மாணவர்களின் சிந்தனை வளத்தை வளர்க்கும் ஒரு முக்கியத் தளமாகச் செயல்படுகின்றது. ஆகவே, ஆசிரியர்கள் தங்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் இலக்கியங்களைக் கற்பிக்கும் போது, மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்துக் கற்றல் கற்பித்தலை நடத்த வேண்டும்.

**கருச்சொற்கள்** : சிந்தனை வளம், சிறுகதைகள், தமிழ் இலக்கியம், எழுதும் ஆற்றல், கற்றல் கற்பித்தல்

**Abstract**

This research is to investigate the thinking skills in short stories of Form Five students. In the meantime, thinking skill is considered the main element and it is an important element in short stories. Short stories are one of the components of Tamil literature which is regarded as the best tool to enhance the thinking of the students. The purpose of this research is to determine the students' ability on writing and to find out their ability of thinking skills in short stories. This study was conducted in one of the secondary school in Kapar, Selangor. The research was conducted on 10 students and 2 Tamil teachers. The evidence of this research was collected based on interview questions and short stories written by the Form Five students on themes of friendship and disability. At the end of this research, their ability on writing and the thinking skills were revealed in their short stories. The research also proved that the thinking skills of the students are also developed by the writing of shorts stories. Furthermore, students have good thinking skills in writing short stories. Schools are considered as the only place that boosts and develop students' thinking skills. Hence, the teachers must give an importance to the thinking development in their curriculum activities.

**Keywords:** Thinking Skills, Short Stories, Tamil Literature, Writing Skills, Teaching

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 11th September 2018, revised 30th September 2018, accepted 17th October 2018

**முன்னுரை**

ஒரு மனிதன் கற்கும் கல்வி சிந்திக்கத் தூண்டுவதோடு, திறன்மிக்க வகையில் சிந்திக்கும் திறனையும் ஆற்றலையும் வளர்க்க வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே மலேசியத் திருநாட்டில் முறையாகச் சிந்தனையைக் கற்பிக்கும் முயற்சி 1990-களில் தொடங்கியது எனலாம் (நாராயணசாமி, 2012)[1]. மலேசியக் கல்வியில் சிந்தனை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இக்காலக்கட்டத்தில் பெரும்பாலான மாணவர்கள் கற்றக் கல்வியை அப்படியே கிளிப்பிள்ளைப் போல் ஒப்புவிக்கும் ஆற்றலையே கொண்டு செயல்படுகின்றனர். இதனைத்தான், முகமது யூசோப் அவர்கள் தமது ஆய்வில் தற்போதையக் கற்றல் கற்பித்தல் மனனம் அடிப்படையில் நடைப்பெறுகின்றது என்கிறார். மேலும், ஆசிரியர்கள் மாணவர்களிடம் சுலபமான கேள்விகளை அல்லது தாழ்நிலை கேள்விகளை மட்டுமே கேட்பதால் மாணவர்கள் எதனையும் சிந்தித்துச் செயல்படுவதில்லை என்று இவர்

குறிப்பிட்டுள்ளார் (முகமது யூசோப், 2006)(Muhammad Yusof, 2006)[2]. இதன் வாயிலாக, பெரும்பாலனவர்கள் படிக்கும் கல்வியைச் சிந்தித்துக் கற்பதில்லை என்பது நம்மால் அறிய முடிகின்றது. கல்வி உலகில், மிக முக்கியக் கூறாகக் கருதப்பட வேண்டியது மாணவர்களின் சிந்தனை வளர்ச்சி ஆகும். அதன் அடிப்படையில் ஒரு மொழியின் வாயிலாகப் படைக்கப்படும் இலக்கியங்கள் ஒரு மாணவனின் சிந்தனை வளர்ச்சிக்குப் பெறும் பங்காற்றுகின்றன. மேலும், இன்றையப் படைப்பிலக்கியங்களின் கரு மனித வாழ்விலிருந்தே உருவாகிறது. அவ்வகையில் மனிதர்களின் அனுபவங்களும், எண்ணங்களும் சிறப்பாக, சுதந்திரமாக வெளிப்படும் பொழுது படைப்பிலக்கியங்கள் தோன்றுகின்றன. இவ்விலக்கியங்கள் சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்று பல்வேறு வடிவங்களைக் கொண்டு விரிவு பெறுகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு மலேசியத் தேர்வு அறவாரியம் இடைநிலைப்பள்ளிக்கான எஸ்.பி.எம் அரசாங்கப் பொதுத் தேர்வில் இலக்கியங்களின் வரிசையில் தனி மனித வாழ்வியலையும் சமூக வாழ்வியலையும் படம் பிடித்துக் காட்டும் சிறுகதை எழுதும் திறனை உட்படுத்தியுள்ளனர் (மலேசியத் தேர்வு அறவாரியம், 2016)[3]. தேர்வு நோக்கத்திற்காக மட்டும் மாணவர்கள் இச்சிறுகதையைத் தேர்ந்தெடுத்து எழுதுவதால் மாணவர்கள் சிறுகதையைச் சிந்தனை வளத்தைக் கொண்டு உய்த்துணர்ந்து எழுதுவதில்லை (புனிதா, 2004)[4]. இதனால், மாணவர்களிடையே சிறுகதை எழுதும் ஆற்றல் இருக்கின்றதா என்பது கேள்வி குறியாகவே இருக்கின்றது. சிறுகதையை ஒரு மாணவன் சிந்தனை வளத்தைக் கொண்டு எழுதுவதன் வழி பல நற்சிந்தனைகளை வாழ்க்கைக்கு அமல்படுத்த இயலுகின்றது. இக்காலக்கட்டத்தில், ஒவ்வொரு மாணவர்களுக்கும் சிந்தனை வளம் என்பது முக்கியக் கூறாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக, மாணவர்களிடம் ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை என்ற இந்த இருநிலை சிந்தனை வளமும் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் எனலாம். சிந்தனை வளம் ஒரு மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றது. ஆனால், இன்றையக் காலக்கட்டத்தில் பள்ளிகளில் கற்றல் கற்பித்தலில் சிந்தனை வளம் எந்த அளவிற்கு மாணவர்களிடம் சென்று அடைந்துள்ளது என்பது கேள்விகுக்குறியாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக, மாணவர்கள் சிறுகதைகளை எழுதும் பொழுது சிந்தனை வளத்தோடு எழுதுகின்றனரா என்பதும் தெரியவில்லை. எனவே, இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஓர் ஆய்வினை மேற்கொள்வது அவசியமானது ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டு ‘ஐந்தாம் படிவம் மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளம்’ என்று ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வு நோக்கம்

ஐந்தாம் படிவம் மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளம் என்பதனை ஆராய்வதற்காக நடத்தப்பட்ட இவ்வாய்வு இரண்டு ஆய்வு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. அவை;

1. ஐந்தாம் படிவம் மாணவர்களின் சிறுகதை எழுதும் ஆற்றலைக் கண்டறிதல்.

2. ஐந்தாம் படிவம் மாணவர்கள் எழுதும் சிறுகதைகளில் சிந்தனை வளத்தை ஆராய்தல்.

**ஆய்வு அணுகுமுறை**


ஐந்தாம் படிவம் மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளம் எனும் இவ்வாய்வை ஆய்வாளர், கருத்துகளை விளக்கப் பயன்படுத்தப்படும் பண்புசார் முறையைப் பயன்படுத்தி நடத்தியுள்ளார். மேலும், இவ்வாய்வில் 2 வெவ்வேறு கரு அடிப்படையில் மாணவர்கள் எழுதிய சிறுகதைகள் மதிப்பீடு செய்யப்படுவதால் மதிப்பீட்டு அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, இக்கட்டுரைகள் யாவும் பலதரப்பட்ட வகையில் பகுப்பாய்வுச் செய்யப்படுவதால் பகுப்பாய்வு முறை திறனாய்வும், ஆய்வின் கருத்துகளையும் நேர்காணலில் கூறப்பட்டத் தகவல்களையும் விளக்கிக் கூறுவதால் விளக்கியல் முறையும் கையாளப்பட்டுள்ளது. ஆய்வாளர் தனது ஆய்வு குறித்தத் தகவல்களைச் சேகரிக்கப் பல்வேறு அணுகுமுறைகளைக் கையாண்டுள்ளார். காப்பார் வட்டாரத்தில் அமைந்துள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் பயிலும் ஐந்தாம் படிவம் மாணவர்களின் சிறுகதைகள் எழுதும் ஆற்றலைக் கண்டறிவது முதல் மாணவர்கள் எழுதும் சிறுகதைகளில் சிந்தனை வளத்தை ஆராய தேவையாக அமையும் தரவுகள் வரை சேகரிக்கும் முறைகளைப் பயன்படுத்திச் சேகரித்துள்ளார்.

ஆய்வாளர் கையாளப்பட்ட தரவு சேகரிக்கும் முறைகள் முறையே மாணவர்களின் சிறுகதைகள் மற்றும் நேர்காணல் ஆகியன ஆகும். அதன் அடிப்படையில் முதலில், மாணவர்களுக்குச் சிறுகதையின் தலைப்புகள் வழங்கப்பட்டது. நட்பு மற்றும் ஊனம் ஆகிய இரண்டு கரு அடிப்படையில் மாணவர்கள் சிறுகதைகள் எழுத ஆய்வாளரால் பணிக்கப்பட்டது. மாணவர்கள் இரண்டு தலைப்பில் சிறுகதைகள் எழுத வேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில் அவர்களுக்குச் சிறுகதைகள் எழுத ஒரு வாரம் கால அவகாசம் வழங்கப்பட்டது. சிறுகதைகள் யாவும் கொடுக்கப்பட்டத் திகதிக்கு ஒரு வாரம் கழித்து மாணவர்களால் ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து, இந்த ஆய்விற்கான கூடுதல் தகவல்களைப் பெற சிலாங்கூர் மாநிலத்தில் காப்பார் வட்டாரத்தில் அமைந்துள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் இரண்டு தமிழாசிரியர்களிடம் தனிப்பட்ட முறையில் நேர்காணல் நடத்தப்பட்டது.

பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி சேகரித்தத் தரவுகள் யாவும் இவ்வாய்வில் பண்புசார் முறையில் பகுப்பாய்வுச் செய்யப்பட்டுள்ளது. முதலில், மாணவர்களின் சிறுகதை எழுதும் ஆற்றல் சிறுகதையின் அமைப்பு, வடிவம், நீளம், சிறுகதையில் மாணவர்கள் எடுத்த மதிப்பெண் ஆகிய இந்த நான்கு கூறுகளின் அடிப்படையில் பகுப்பாய்வுச் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, ஆய்வாளர் மாணவர்களின் சிறுகதைகளில் காணப்படும் சிந்தனை வளத்தை நான்கு கூறுகளின் அடிப்படையில் பகுப்பாய்வுச் செய்துள்ளார். அவை தொடர்புபடுத்துதல், பண்புகளை விளக்கப்படுத்துதல், சிக்கல் களைதல், முடிவு காணுதல் போன்றவையே ஆகும். இதனை ஒட்டிய முடிவுகள் யாவும் அட்டவணை வடிவில் வழங்கப்பட்டுள்ளன. இதன் வழி, கிடைக்கப்பெறும் தகவல்கள் விளக்கியல் முறை

அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. மேலும், கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் சிந்தனை வளம் குறித்து இரண்டு தமிழாசிரியர்களிடம் நேர்காணல் வடிவில் கேள்விகள் கேட்கப்பட்டது. நேர்காணல் வழி திரட்டப்பட்ட தரவுகள் யாவும் ஆய்வாளரால் மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளத்தைப் பகுப்பாய்வுச் செய்யும் போது விளக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்படும் தரவுகள் அனைத்தும் ஆய்வு நோக்கம் மற்றும் ஆய்வு வினா ஆகியவைக்கு ஏற்றவாறு செய்யப்பட்டுள்ளது. அதோடுமட்டுமல்லாமல், பகுப்பாய்வின் போது சேகரிக்கப்பட்ட தகவல்களிலிருந்து ஆய்வுக்கு மிக முக்கியமான, ஆய்வுடன் தொடர்புடைய செய்திகள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

பகுப்பாய்வு முறை




*குறிவரைவு 1.* மாணவர்களின் சிறுகதைகள் எழுதும் ஆற்றல்

ஐந்தாம் படிவம் மாணவர்களிடம் சிறுகதைகள் எழுதும் ஆற்றல் உள்ளனவா என்பதை அடையாளம் காண்பதே இவ்வாய்வில் ஆய்வாளரின் முதல் நோக்கமாக இருந்தது. ஆனால், ஆய்வின் தரவுகள் பகுப்பாய்வுச் செய்தபின் கிடைக்கப்பெற்ற கண்டுபிடிப்புகளின் வழி இக்கருதுகோள் மெய்பிக்கப்பட்டுள்ளது என்பதனை மேற்காணும் குறிவரைவு விளக்குகின்றது. ஐந்தாம் படிவம் மாணவர்கள் எழுதிய 'நட்பு' மற்றும் 'ஊனம்' என்ற இரு கரு அடிப்படையிலான சிறுகதைகளின் வழி அவர்களிடம் சிறுகதை எழுதும் ஆற்றல் இருக்கின்றது என்பதனை ஆய்வாளர் கண்டறிந்துள்ளார். இவ்வாய்வில் மாணவர்களின் சிறுகதைகள் எழுதும் ஆற்றலானது சிறுகதையின் அமைப்பு, சிறுகதையின் வடிவம், சிறுகதையின் நீளம், சிறுகதையில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது என்பது மேற்கண்ட குறிவரைவு 1 எடுத்துரைக்கின்றது.

எழுதும் திறனானது இயற்கையிலேயே வர வேண்டிய திறனாகும் (உமாதேவி, 2001)[5]. "எதை எழுதுவது; எதை விடுப்பது; எப்படிப் படைப்பது; எந்தச் சொல்லைக் கையாள்வது; இப்படிப் பல எண்ணவோட்டங்கள். அவற்றை ஒருமுகப்படுத்தி கூர்மையுடனும், தெளிவுடனும், நுண்மையுடனும் அதே வேளையில் சற்று இனிமையுடனும் ஓர் எழுத்துப் படிவத்தைப் படைப்பதென்பது சவால்மிக்க ஒன்றாகும் (நாராயணசாமி, 2012)[1]. அவ்வகையில் இவ்வாய்வில் உட்படுத்தப்பட்ட பெரும்பாலான மாணவர்கள் சிறுகதையின் கூறுகளைப் பயன்படுத்தி சிறுகதையின் வடிவம் மாறாமல் தங்களின் இரண்டு சிறுகதைகளையும் எழுதி அவர்களின் சிறுகதை எழுதும் ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தது ஆய்வாளரால் கண்டறியப்பட்டது என்பதனைக் குறிவரைவு 1 தெளிவுப்படுத்துகின்றது. இருப்பினும், சில மாணவர்கள் சிறுகதையின் கூறுகளைச் சரிவர உள்வாங்கி கொள்ளவில்லை. இதனால், அம்மாணவர்களின் சிறுகதைகள் சிறுகதை வடிவம் அல்லாமல் கதை மற்றும் கட்டுரை வடிவில் இருப்பதையும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

மேலும், அம்மாணவர்கள் தங்கள் சிறுகதையைக் குறைந்த அளவிலான சொற்களைக் கொண்டே எழுதியுள்ளதையும் இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது. இதனால், அம்மாணவர்கள் எழுதிய சிறுகதைகளில் பெற்ற மதிப்பெண்களும் குறைவான அளவிலேயே இருப்பதை இவ்வாய்வின் வழி காண முடிகின்றது. இதற்குக் காரணம், மாணவர்களின் எண்ணவோட்டத்தில் சிறுகதை என்பது எழுதுவதில் கடினமானது என்ற தவறான மனப்போக்கைக் கொண்டு இருப்பதனால் அவர்களிடம் சிறுகதை எழுதும் ஆற்றல் குறைவாகவே காணப்படுகின்றது. மாணவர்கள் தேர்வு அடிப்படையிலே தங்களின் கல்வியைக் கற்க ஆர்வம் காட்டுவதனால் அவர்களின் எண்ணம் புள்ளியின் மேல் அமைகின்றது (நூர் அஸ்லிசா, 2001)(Nur Azliza, 2001)[6]. இதனால், சிறுகதை எழுதும் முழு ஆற்றலை வளர்த்துக் கொள்ளாமல் தேர்வு புள்ளியை மட்டுமே மனதில் வைத்துக் கதை எழுதும் போக்கு மாணவர்களிடம் காணப்படுகின்றது.

ஆதலால், சிறுகதையைத் தேர்ந்தெடுத்து எழுதுவதனால் அவர்களின் புள்ளிகள் சரிந்து விடுமோ என்ற பயத்தாலும் மாணவர்கள் சிறுகதை எழுதுவதில் அவர்களின் ஆற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துவதில்லை என்பதனை அறிய முடிகின்றது. அதோடுமட்டுமல்லாமல்,

ஆசிரியர்கள் சிறுகதையை மாணவர்களுக்கு ஆழமாகப் போதிக்காத காரணத்தாலும் மாணவர்களிடையே சிறுகதை எழுதும் ஆற்றல் குன்றியே காணப்படுகின்றது எனலாம். ஆசிரியர்கள் வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் தங்களின் கற்றல் கற்பித்தலை நடத்தி முடித்து விட வேண்டும் என்ற நோக்கத்திலேயே செயல்படுகின்றனர். இதனால், மாணவர்களுக்கு ஆசிரியர் கற்பிக்கும் போதனை முறை முழுமையாகச் சென்றடைவதில்லை. குறிப்பாக, சிறுகதையை ஆசிரியர்கள் போதித்தாலும் மாணவர்கள் சிறுகதையை வகுப்பறையிலேயே எழுத வாய்ப்பு அமைவதில்லை. இதனால், மாணவர்கள் சிறுகதையை எழுதும் அமைப்பு முறையை எளிதில் மறந்து விடுகின்றனர் என்பதனை ஆசிரியை நேர்காணல் செய்ததன் வழி அறிய முடிந்தது.

இதனைத் தவிர்த்து, சில ஆசிரியர்கள் தமிழ்மொழி பாடத்தில் கட்டுரைக் கற்பிக்கும் போது வடிவமற்ற கட்டுரைகளையே அதிகமாகக் கற்பிக்கின்றனர். விளக்கக் கட்டுரை, விவாதம், வருணனை, சிறுகதை போன்ற கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதனை மாணவர்கள் அறிகின்றனர். ஆனால், சில ஆசிரியர்கள் வடிவக் கட்டுரைகளுக்கு அதிலும் குறிப்பாகச் சிறுகதை எழுவதற்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை. அதனால், மாணவர்களிடம் சிறுகதை எழுதும் ஆற்றலும் குறைவாகவே காணப்படுகின்றன. ஒரு மாதத்தில் அதிகப் பட்சமாக இரு முறையே தமிழ்மொழிப் பாடவேளையில் கட்டுரைகள் ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது. இதில் சிறுகதை எழுதுதல் எத்தனை முறை மாணவர்களுக்குப் போதிக்கப்படுகின்றது என்பது கேள்வி குறியாகவே உள்ளது என்பதை ஆசிரியயை நேர்காணல் செய்ததன் மூலம் அறிய முடிந்தது. ஆகவே, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களிடம் சிறுகதை எழுதும் ஆற்றல் வெளிப்பட்டு இருந்தாலும் ஒரு தரமிக்கச் சிறுகதையை உருவாக்கும் அளவிற்கு வெளிப்படவில்லை என்பதனை இவ்வாய்வின் தரவுகளின் வழி ஆய்வாளரால் கண்டறியப்பட்டது.

**மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளம்**

**தொடர்புபடுத்துதல்**

ஆய்வில் கிடைக்கப்பெற்றத் தரவுகளின்படி, ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 10 மாணவர்களில் 8 மாணவர்கள் ‘நட்பு’ எனும் சிறுகதையைத் தலைப்புக்கு ஏற்றவாறு சிறப்பான முறையில் தொடர்புபடுத்தி எழுதியிருந்தனர். இந்த 8 மாணவர்களும் ‘நட்பு’ எனும் சிறுகதையை நல்ல நட்பின் ஆழம், தவறிழைக்கின்ற தன் நண்பனின் பிழையினைச் சுட்டிக்காட்டும் நட்பு, கூடா நட்பினால் ஏற்படும் தீமை, தற்கால சூழலில் நட்பு எவ்வாறு உள்ளது போன்றவற்றின் அடிப்படையில் தொடர்புபடுத்தி எழுதியுள்ளனர். இதன் வழி, மாணவர்களிடையே நட்பைப் பற்றிய ஆழமான சிந்தனை வளம் மாணவர்களிடையே வேரூன்றி இருப்பதைக் காண முடிகின்றது. இதற்குக் காரணம் மாணவர்கள் அவர்களின் தாய் தந்தைக்கு அடுத்துப் பள்ளி பருவத்தில் தன் நண்பர்களின் நிழலிலே அதிக நேரம் இருக்கின்றனர். இதனால், இம்மாணவர்களிடையே நட்பைப் பற்றிய புரிதலும் தெளிவும் அதிகமாகக் காணப்படுகின்றது.

அந்தத் தெளிவு பெற்ற சிந்தனையைதான் அவர்கள் தங்களின் சிறுகதையில் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதனை ஆசிரியரின் நேர்காணலின் மூலம் அறிய முடிந்தது.

ஊனம் எனும் சிறுகதையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 10 மாணவர்களில் 7 மாணவர்கள் மிகச் சிறப்பான முறையில் தங்களின் சிறுகதையைத் தொடர்புபடுத்தி எழுதியிருந்தனர் என்பது கிடைக்கப்பெற்ற தரவுகளின் மூலம் கண்டறியப்பட்டது. இம்மாணவர்கள் ஊனத்தை உடலில் இருக்கக்கூடிய ஊனம் எனவும், ஒழுக்கமற்றவர்களும் ஊனமானவர்கள் எனவும், கல்வியறிவு இல்லாதர்வர்களும் ஊனமானவர்கள் எனவும் தொடர்புபடுத்தி எழுதியிருந்தனர். இம்மாணவர்கள் அவர்களின் பார்வையில் எதையெல்லாம் ஊனத்திற்குச் சமமாகக் கருதுகின்றார்களோ அதனையே சிறுகதைகளாகப் படைத்துள்ளனர். இதற்குக் காரணம், மாணவர்களின் மனதில் ஆழப்பதிந்துள்ளதும், அடிக்கடி பயன்படுத்துவதும் மற்றும் அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவமுமே சிறுகதையாக எழுதுவதற்குக் காரணமாக அமைகின்றது (முருகன்.தி, 2013)[7]. இக்கூற்றிற்கிணங்க, மாணவர்கள் ஊனத்தைப் பலதரப்பட்ட நிலையில் சிந்தித்துத் தொடர்புபடுத்தி எழுத முடிந்தது. உடல் ஊனத்தோடு பிறப்பது மட்டும் ஊனமல்ல மாறாக வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய சிலவற்றைப் பின்பற்றாமல் இருப்பதும் ஒரு வகையில் ஊனம்தான் என்ற சிந்தனையை முன் வைத்து எழுதியிருந்தனர். இதனால், அம்மாணவர்களிடையே ஒன்றைப் பலதரப்பட்ட நிலையில் தொடர்புபடுத்தி எழுதும் சிந்தனை வளம் இருக்கின்றது என்பது ஆசிரியரின் நேர்காணலின் மூலம் தெளிவாகிறது.

**பண்புகளை விளக்கப்படுத்துதல்**

ஆய்வில் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, ‘நட்பு’ எனும் சிறுகதையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 10 மாணவர்களில் 9 மாணவர்களும் ‘ஊனம்’ எனும் சிறுகதையில் 8 மாணவர்களும் தங்களின் சிறுகதைகளில் வலம் வரும் கதைமாந்தர்களின் பண்புநலன்களை விளக்கப்படுத்தி மிகச் சிறப்பாக எழுதியிருந்தனர். அவ்வகையில் இம்மாணவர்கள் உயரிய பண்புகளையும் தீய பண்புகளையும் விளக்கப்படுத்தி எழுதியிருந்தனர். இம்மாணவர்கள் சிறுகதைகளில் உதவும் மனப்பான்மை, அன்புடைமை, தாராள மனம், ஊக்கமுடைமை, துணிவு போன்ற நற்பண்புகளை வெளிப்படுத்தியுள்ளனர். பொதுவாக, இத்தகைய நற்பண்புகள் யாவும் இம்மாணவர்கள் யாவரும் தங்கள் அன்றாட வாழ்க்கையில் அமல்படுத்தும் நற்பண்புகள் ஆகும். இதன் காரணமாகதான் இம்மாணவர்கள் இத்தகைய நற்பண்புகளை அவர்களின் சிறுகதையில் வெளிப்படுத்த முடிந்தது எனலாம்.

இதனையடுத்து, சில மாணவர்கள் எழுதிய இரண்டு சிறுகதைகளிலும் தீய பண்புகளான ஈவிரக்கமின்றி செயல்படுதல், தீய நட்போடு பழகுதல், ஊக்கமில்லாமல் செயல்படுதல், பொய் கூறுதல், பெற்றோரை மதிக்காமல் நடப்பது போன்ற தீயப்பண்புகளை வெளிப்படுத்தி எழுதியுள்ளனர். இதற்குக் காரணம் என்னவென்றால், இம்மாணவர்களால் தங்களிடம் உள்ள நற்பண்புகளைக் காட்டிலும் தீயப்பண்புகளைதான் அதிக அளவில் கருத்துணர முடிகின்றது.

அதுமட்டுமின்றி, இம்மாணவர்களில் சிலர் பள்ளிகளில் கட்டொழுங்கு பிரச்சனையிலும் தலைக்காட்டியுள்ளனர் என்று இப்பள்ளி தமிழாசிரியர் நேர்காணலின் போது கூறினார். ஆகையால், இம்மாணவர்களுக்கு நல்லது மற்றும் கெட்டதைப் பகுத்தாராயும் தன்மை குணத்திலே இல்லை எனலாம். அதனால்தான், இவர்கள் தங்களின் சிறுகதைகளில் தீயப்பண்புகளை முன்னிறுத்தி விளக்கப்படுத்தியுள்ளனர்.

**சிக்கல் களைதல்**

ஆய்வில் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, ஆய்வுக்குட்படுதப்பட்ட 10 மாணவர்களில் 6 மாணவர்கள் மட்டுமே அவர்கள் எழுதிய இரண்டு சிறுகதைகளிலுமே சிக்கலைக் களைந்துள்ளனர். சிக்கல் களைதல் என்பது நமது வாழ்வில் ஏற்படும் இன்னல்களைச் சாதூரியமாகக் களைந்து அதிலிருந்து விடுவது ஆகும். அவ்வகையில் இம்மாணவர்கள் தங்களின் சிறுகதையில் முன் வைத்த சிக்கலுக்கான தீர்வுகளை அழகுற களைந்துள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது. இதற்குக் காரணம், சிக்கல் களைதல் திறனை மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று இன்றைய கல்வி உலகில் அதிகம் பேசப்பட்டு வருகின்றன. அதற்கென பிரத்தியேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மேலும், சிக்கல் களைதல் திறன் மாணவர்கள் பயிலும் இலக்கிய கூறுகளிலும் அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளது. எல்லா வகை இலக்கிய கூறுகளிலும் இத்திறன் தெரிபொருளாகவும் மறைபொருளாகவும் இருப்பதை மாணவர்கள் அறிந்து வைத்திருப்பதனால் அவர்கள் எழுதிய சிறுகதைகளில் முன் வைத்த சிக்கலை எளிதில் களைய முடிந்தது. இதனைத் தவிர்த்து, புத்தாக்கம் மற்றும் பகுப்பாய்வு வகை சிந்தனைத் திறன்களில் முதன்மையான சாரம் உயர்நிலைச் சிந்தனையாகும். உயர்நிலைச் சிந்தனையை ஆறுவகையாக வகைப்படுத்தலாம். இச்சிந்தனைகள் யாவும் சிக்கல் களைதல் எனும் திறனுக்கு முன்னுரிமை கொடுத்து வழிநடத்துகின்றன. ஆகவே, மாணவர்களுக்குச் சிக்கல் களைதல் எனும் சிந்தனை வளம் இருப்பதனால் அவர்களின் சிறுகதையில் முன் வைத்த சிக்கலை அவிழ்த்துச் சிக்கலை எழுதியுள்ளனர் என்பது ஆசிரியரின் நேர்காணல் மூலம் அறிய முடிந்தது.

**முடிவு காணுதல்**

ஆய்வில் திரட்டப்பட்டத் தகவலின்படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 10 மாணவர்களில் 'நட்பு' எனும் சிறுகதையில் 7 மாணவர்களும் 'ஊனம்' எனும் சிறுகதையில் 2 மாணவர்களும் தங்களின் சிறுகதைகளுக்கான முடிவைக் கண்டறிந்துள்ளனர். மாணவர்களிடம் முடிவு காணுதல் என்ற சிந்தனை வளம் குறைந்த அளவிலையே காணப்படுகின்றது என்பதை திரட்டிய தரவுகளின் மூலம் அறிய முடிகின்றது. இதற்குக் காரணம், இன்றையச் சூழலில் இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலைப் பொறுத்தவரை சிந்தனை வளத்தை மாணவர்களிடத்தில் சேர்ப்பதில் ஆசிரியர்களால் முழுமையாகப் பங்காற்ற முடியவில்லை. அவ்வகையில், பெரும்பாலான சூழ்நிலைகளில் ஆசிரியர்கள் சிந்தனை வளத்தைப் பாடத்தின் முடிவில் வலியுறுத்த வேண்டிய கட்டாயத்தை எதிர்நோக்குகின்றனர்.

சில வேளைகளில் ஆசிரியர்கள் முயற்சி எடுத்துச் சிந்தனை வளத்தை வலியுறுத்தும் வேளையில் சில கூறுகள் இதற்குச் சாதகமாக அமைவதில்லை. குறைந்த நேர பாடவேளை இதில் முக்கியப் பங்காற்றுகின்றது. உண்மையில் பார்த்தோமானால், இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் மாணவர்கள் முழுமையாக 48 மணிநேரம் மட்டுமே கற்றுத் தேர்வை எழுதுகின்றனர். ஆசிரியர்களின் வேலை பளு, மாணவர்களின் வருகை போன்றவை இதற்குத் தடையாக அமைகின்றன. அதுமட்டுமின்றி, தேர்வில் சிந்தனை வளம் தொடர்பான நேரடிக் கேள்விகள் எதுவும் இல்லை என்ற காரணமும் ஆசிரியர்கள் அதனை வலியுறுத்துவதற்கு அதிக ஆர்வம் காட்டுவதில் தடையாக அமைகின்றன (புனிதா.மா, 2004)[4]. ஆகவே, சிறுகதைகளில் மாணவர்கள் முடிவு காணுதல் எனும் சிந்தனை வளத்தைக் கைவரப் பெறாததற்கான காரணமாக இது அமைகின்றது. இதனால்தான், மாணவர்களிடத்தில் முடிவு காணுதல் என்ற சிந்தனை வளம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுவதை அறிய முடிந்தது.

**முடிவுரை**

ஆய்வாளர் படிவம் ஐந்து மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளம் எனும் தலைப்பில் ஆய்வை மேற்கொண்டுள்ளார். ஆய்வாளர் ஆய்வு தொடர்பான தகவல்களைத் திரட்டி பகுப்பாய்வுச் செய்ததன் வழி ஆய்வின் முடிவைக் கண்டறிந்துள்ளார். ஐந்தாம் படிவம் மாணவர்களிடம் சிறுகதை எழுதும் ஆற்றல் வெளிப்பட்டுள்ளது என்பதனை அவர்கள் எழுதிய இரண்டு வெவ்வேறு கரு அடிப்படையிலான சிறுகதைகளின் வழி அறிய முடிகின்றது. இவ்வாய்வில் மாணவர்களின் சிறுகதை ஆற்றலானது சிறுகதையின் அமைப்பு, சிறுகதையின் வடிவம், சிறுகதையின் நீளம், சிறுகதைகளில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் போன்றவற்றின் அடிப்படையில் கண்டறியப்பட்டது. இருப்பினும், மாணவர்கள் தரமிக்க ஒரு சிறுகதையை எழுதும் ஆற்றல் மாணவர்களிடையே குன்றியே காணப்படுகின்றது என்பது ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டது.

கல்வி உலகில், மிக முக்கியக் கூறாகக் கருதப்பட வேண்டியது மாணவர்களின் சிந்தனை வளம் ஆகும். சிந்தனை வளத்தில் பல கூறுகள் உள்ளன. அவற்றில் இவ்வாய்விற்குத் தொடர்புபடுத்துதல், பண்புகளை விளக்கப்படுத்துதல், சிக்கல் களைதல், முடிவு காணுதல் என்ற 4 கூறுகளின் வழி மாணவர்களின் சிந்தனை வளம் மதிப்பிடப்பட்டது. இந்தக் கூறுகள் யாவும் பெரும்பாலான மாணவர்களின் சிறுகதைகளில் வெளிப்பட்டதால் மாணவர்கள் சிந்தனை வளத்தின் கூறுகளைச் சிறுகதைகளின் வழி பெற்றுள்ளனர் என்பதனை இவ்வாய்வின் வழி அறியலாம். நமது தமிழ்மொழியை எடுத்துக் கொண்டால் சிந்தனையைத் தூண்டும் வகையில் பல இலக்கியங்கள் உள்ளது. தமிழர்களின் இலக்கியங்கள் யாவும் சிந்தனையைத் தட்டி எழுப்பக் கூடிய பொக்கிஷங்கள் என்பதனை இவ்வாய்வின் வழி மெய்பிக்கப்பட்டுள்ளது. சிறுகதை என்பது தனிமனித வாழ்வியலையும் சமூக வாழ்வியலையும் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றது.

ஆய்வின் முடிவின்படி, சிறுகதையின் வாயிலாகப் பெரும்பாலான மாணவர்களின் சிந்தனை வளம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனைக் காணலாம். இதனையே, மஸ்னுன் இப்ராஹிம் என்பவர் 2002-யில் மொழியின் வாயிலாகப் படைக்கப்படும் இலக்கியங்கள் மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றது எனக் குறிப்பிடுகின்றனர் (மஸ்னுன் இப்ராஹிம், 2002)(Masnun Ibrahim, 2002)[8]. மாணவர்கள் நல்லதொரு சிறுகதையைப் படைப்பதற்குச் சிந்தனை வளம் தேவைப்படுகின்றது. இவ்வாறான சிந்தனை வளம் மாணவர்களிடையே பெரும் சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தவும் மாறுப்பட்ட சிந்தனையை உருவாக்க வழி செய்யும் என 10-வது உலக ஆசிரியர் மாநாட்டுக் கட்டுரையில் செல்வஜோதி அவர்களும் தம் கட்டுரையில் தெரிவித்துள்ளார் (வேலுமணி, 2003)[9]. அதுமட்டுமின்றி, இவ்வாய்வின் வழி, சிறுகதைகள் மாணவர்களைப் பல கோணங்களில் சிந்திக்க வைத்துள்ளது என்பதும் கண்டறியப்பட்டது. ஆக, சிறுகதை மாணவர்களின் சிந்தனை வளத்தை மேம்படுத்தும் சிறந்த ஒரு கருவி என்றும் இவ்வாய்வின் வழி கூறலாம். மேலும், இவ்வாய்வின் வழி சிறுகதை மாணவர்களின் சிறுகதை ஆற்றலை வெளிப்படுத்துகின்றது என்பதனையும் சிறுகதை மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு வித்திடுகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**


1. Narayanasamy, K. (2012). *Teaching to think and to teach thinking (சிந்திக்கக் கற்பித்தலும் சிந்தனையைக் கற்பித்தலும்).* Selangor: Radan Creative.
2. Muhammad Yusof. (2006). Teaching critical and creative skills among high school students in Malay language (Mengajar Kemahiran Secara Kritis Dan Kreatif Di Kalangan Pelajar Sekolah Menengah Dalam Mata Pelajaran Bahasa Melayu). *Jurnal Pendidikan Malaysia, 34*(1), 67-92.
3. Malaysia Exam Syndicate. (2016). *Tamil language: Paper 1 (தமிழ் மொழி தாள் 1).* Kuala Lumpur: Malaysia Exam Syndicate.
4. Punitha, M. (2004). *Thinking resources in teaching Tamil language learning (தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் சிந்தனை வளம்).* Seremban: Raja Melewar Teacher Training Institute.
5. Umadevi, P. (2011). *Stylistic in secondary school students short stories (இடைநிலைப்பள்ளி மாணவர்களின் சிறுகதைகளில் நடையமைப்பு).* Kuala Lumpur: University of Malaya.
6. Nur Azliza. (2001). *Themes analysis form Four student short stories (Analisis tema dan persoalan cerpen pelajar Tingkatan Empat).* Jurnal Pendidikan Bahasa Melayu, 3 (2): 79-91.
7. Murugan, T. (2013). *Life values in Tamil short stories (தமிழ் சிறுகதைகளில் வாழ்வியல் கூறுகள்).* Chennai: Kalainyan Publication.

8. Masnun Ibrahim. (2002). Analyzing language styles in student short stories (Menganalisis gaya bahasa dalam cerpen pelajar). *Jurnal Pendidikan Bahasa Melayu*, *2* (2): 19-31.
9. Velumani, S. (2003). *Analyzing students short stories (மாணவர்களின் தமிழ் சிறுகதைகள் ஓர் ஆய்வு).* Kuala Lumpur: University of Malaya.

**Citation in Tamil**
ஷாமினி பெரியசாமி. (2019). ஐந்தாம் படிவ மாணவர்களின் சிறுகதைகளில் சிந்தனை வளம். *மூவாலிம் சமூக அறிவியல் மற்றும் மனிதவியல் ஆய்விதல், 3*(1), 111-123. https://doi.org/10.33306/mjssh/09

**Citation in Tamil @ Romanised**
Shamini Perisamy. (2019). Aintham padiva maanavarkalin sirukataikalil sintanai valam. *Muallim Journal of Social Science and Humanities*, *3*(1), 111-123. https://doi.org/10.33306/mjssh/09

**Citation in English**
Shamini Perisamy. (2019). Thinking skills of form 5 students on writing short stories. *Muallim Journal of Social Science and Humanities*, *3*(1), 111-123. https://doi.org/10.33306/mjssh/09